மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இப்போதுதான் இடங்களைத் தேர்ந்தெடுக்கச்சொல்லி அந்தந்த மாவட்ட அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இடங்களைத் தெர்ந்தெடுத்து பட்டியல் வந்த பிறகு குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவையில் நிறைவேற்றப்பட்ட மாநிலசுயாட்சி பற்றிய தீர்மானத்தின் மீது மத்திய அமைச்சரவை நடத்திய விவாதம் குறித்து அரசுக்குத் தகவல் வந்துள்ளதா என்பது பற்றி.

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இராசமன்னார் குழு அறிக்கையை இந்த மன்றத்தில் விவாதித்து மாநிலசுயாட்சித் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அதைப்பற்றி இந்த மன்றத்தில் இருக்கும் சிலர் அது பிரிவினை வாதம் என்று சொன்னாலும் அவசரம் அவசரமாக இன்றையதினம் மத்திய அரசாங்கம் அமைச்சரவையைக் கூட்டி அதைப் பற்றி வியாழக்கிழமை இரவு விவாதித்து இருக்கிறது. அதைப் பற்றியும், அரசியல் சாசனத் திருத்தம் பற்றியும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அப்படி விவாதிக்கிறபோது ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "ஷேக் அப்துல்லாவிற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே காஷ்மீர் பற்றி உடன்பாடு ஏற்பட்டுள்ளது. தமிழ் நாடு முதலமைச்சர் மாநில சுயாட்சி கேட்கும் பின்னணியில் இந்த முடிவைக் கவனிக்க வேண்டும்......................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது ?

திரு. நா. வீராசாமி: இப்படி மத்திய அரசாங்கம் அவசர அவசரமாக கூடி இதைப் பற்றி விவாதித்திருக்கிறார்கள். இதைப் பற்றி அரசாங்கத்திற்கு விவரம் அளித்திருக்கிறார்களா? அல்லது இந்த மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில்....................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

(ஆ) வினநேரம் முழுவதும் வினக்கள் கேட்பதற்குப் பயன்படுத்தப் படாது வேறு அலுவல்கள் வின நேரத்தில் எடுத்துக் கொள்ளப்படுவது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய கேள்வி நேரம் சம்பந்தமாக விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. முதல் மணி பூராவும் கேள்விகளுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்றும், அப்படி அந்த முதல் மணிக்கும் மேலும் செல்ல வேண்டியிருந்தால் தாங்களே அதை நீடிப்பதற்கு அதிகாரம் கொடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது மணி 9-30 தான் ஆகிறது. இன்றைக்கு நிகழ்ச்சிநிரலில் கொடுத்திருக்கும் விவரங்கள் பத்து மணிக்குத் தொடங்குவதுதான் முறையாக இருக்கும். 9-30 மணிக்கு மற்ற அலுவல்களைத் தொடங்குவது என்பது விதிமுறைகளுக்கு விரோதமாக இருக்கிறது. இந்த முறையானது மற்ற சட்ட மன்றங்களில் அனுஷ்டிக்கப்படுகிறது. லோக்சபாவைப் பொறுத்தவரை கூட நாம் இங்கே கேள்வி நேரத்தில் எக்ஸ்டென்ட் செய்வது போல் நேரத்தை எக்ஸ்டென்ட் செய்வதில்லை. 11 மணிக்குக் கேள்வி நேரம் ஆரம்பித்து 12 மணிக்கு "சீரோ உறவர்" என்ற நிலை அங்கே இருக்கிறது. இங்கே "சீரோ உறவர்" 9.05-க்கும் வருகிறது, 9-30-க்கும் வருகிறது என்ற நிலை இருக்கிறது. ஆகவே, ஒன்று விதிமுறைகள் திருத்தப்பட வேண்டும் அல்லது அந்த விதிகளின்படி நடக்க வேண்டும், இதுபற்றித் தங்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. முதல் மணி கேள்வி நேரம். அவையின் அலுவல்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் 1-30 மணி வரை நடக்க வேண்டும். சில நேரங்களில் நிகழ்ச்சி நிரலில் உள்ள செய்திகள் விவாதிக்கப்பட்டு முன்னதாகவே முடிந்து விட்டால் கூட 1-30 மணி நேரம் வரை உட்கார்ந்திருக்க வேண்டுமென்பதில்லை. 1-30 மணிக்கு மேல் நீடித்தால்தான் அவையின் அனுமதியைப் பெற வேண்டுமே தவிர முன்னதாகவே முடிந்தால் விட்டால் அதற்காக அவையின் அனுமதியைப் பெறத் தேவையில்லை. அதே போல் போதிய துணைக் கேள்விகள் அங்கத்தினர்கள் கேட்கவில்லை என்ற காரணத்தால் முன்னதாகவே முடிந்து விட்டது. ஆகவே, அடுத்த அலுவல் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதிலே விதிமுறைகளுக்கு மாறாக எதுவும் இல்லை.

திரு. கோவை செழியன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட மாதிரி 10 மணி வரையிலும் கேள்வி நேரம். கால் அட்டென்ஷன் நோட்டீஸ், அட்ஜர்ண்மென்ட் மோஷன் எல்லாம் கொடுத்திருக்கிறோம். கேள்வி நேரத்தில் கேள்வி கேட்காதவர்கள் 10 மணிக்கு வந்து தாங்கள் கொடுத்த தீர்மானங்களின் பேரில் பேசலாம் என்று வந்தால் 9-30 மணிக்கே முடிந்து விடுகின்ற நிலையில் அவர்களுக்கு வாய்ப்பு இல்லாது போய்விடுகிறது. கேள்வி நேரம் 10-30 மணி வரை எல்லாம் போயிருக்கும்போது இன்றைக்கு ஏன் 9-30 மணிக்கே முடித்து